1972 ஆகஸ்ட் 21]

Sri Kapaleeswarar Temple, Mylapore.

* 164 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government are aware of the resolution of the Madras District Temple Protection Committee about the loss sustained by Sri Kapaleeswarar Temple, Mylapore, Madras in disposing of its lands, about 20th September, 1971; and

(*b*) if so, the details thereof?

சென்னை, மயிலாப்பூரிலுள்ள ஸ்ரீகபாலீஸ்வரர் கோயில்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, மயிலாப்பூரிலுள்ள ஸ்ரீகபாலீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான நிலங்களை 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ஆம் நாள் வாக்கில் விற்பனை செய்ததில், அக்கோவிலுக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து, சென்னை மாவட்ட கோவில்கள் பாதுகாப்புக் குழு தீர்மானம் நிறைவேற்றியிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

Special Tahsildar for Rameswaram Temple.

* 165 *Q.*—THIRU S. S. THENNARASU: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to appoint a Special Tahsildar to receive the Honourable Ministers, and Very Important Persons visiting Rameswaram Temple; and

(*b*) if so, the date on which he will be appointed?

இராமேஸ்வர ஆலயத்திற்குத் தனி தாசில்தார்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமேஸ்வரம் ஆலயத்திற்கு வருகை தரும் மாண்புமிகு அமைச்சர்கள், முக்கியஸ்தர் முதலானோர்களைக் கவனிப்பதற்காகக்

தனியாக ஒரு வரவேற்புத் தாசில்தாரை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது நியமனம் செய்யப்படுவார் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பிற்பட்ட மாவட்டம் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இராமநாதபுரம் தாலூகா, இராமநாதபுரம் மாவட்டத்தில் பிற்பட்ட வட்டம் என்று நம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பொதுவாக, அங்கே இருக்கும் கூட்டாட்சித் தலைவருக்கு வாரத்தில் நான்கு நாட்கள் இராமேஸ்வரம் கோயிலுக்குச் செல்ல வேண்டும். வரும் பிரமுகர்களை வரவேற்பதுதான் முக்கியமான வேலைகளாக இருக்கின்றன. ஆக, திட்டங்கள், பொது மக்களுக்கு உதவி செய்யும் காரியங்களைக் கூட்டாட்சித் தலைவர் பார்க்க முடியவில்லை என்ற குறை அந்தத் தாலூகாவில் இருக்கிற காரணத்தால், ஆலயத்திற்கு வரும் பிரமுகர்களை வரவேற்க தனித் தாசில்தார் போடுவதை சர்க்கார் பரிசீலனை செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்தக் கோரிக்கை அனுப்பப்பட்டு, அரசுத் தரப்பில் நிராகரிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும், அங்கே வரும் பிரமுகர்களை வரவேற்க, தனி அதிகாரியை நியமித்துள்ளோம். இலங்கை அகதிகளை வரவேற்று, அவர்களின் புது வாழ்வுக்காக அதிகப் பணிகளை நிறைவேற்றுகிறோம். இவர்களே இதையும் செய்ய வேண்டுமென்று அரசு தற்போது கருதுகிறது.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சரே இதையும் கவனிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

Archaka Training

*166 Q.—Thiru S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the steps taken by the Government to give training for the members of all the communities for the Archaka Office during 1971–72; and